ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 1875/38 - 2014 අගෝස්තු මස 15 වැනි සිකුරාදා - 2014.08.15
*1875/38 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு ஒக்த்து மாதம் 15 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

பணிப்புரை இல. 50.

**2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபைச் சட்டம்**

10 (1) (அ) ஆம் பிரிவின் கீழான பணிப்புரை

2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபைச் சட்டத்தின் 10 (1) (அ) ஆம் பிரிவின் கீழ் உரித்தளிக்கப்பட்ட அதிகாரங்களின் கீழ் செயற்படுகின்ற, பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையானது, கட்டிடத் தொழிலில் பயன்படுத்தப்படும் வர்ணப்பூச்சுக்களினதும், வார்னிஷ்களினதும், கரைப்பான்களினதும் எல்லா உற்பத்தியாளர்கள் மற்றும் வியாபாரிகளுக்கும் அதன் போத்தல்களில், பொதிகளில் அல்லது கொள்கலன்களின் மீது தெளிவாக பின்வருவனவற்றை குறித்தல் வேண்டுமென பணிப்புரை விடுக்கின்றது.

(அ) தொகுதி இலக்கம் ;
(ஆ) உற்பத்தித் திகதி ;
(இ) சிறந்த பாவனைக்கான கடைசித் திகதி ;
(ஈ) கொள்ளளவு ;
(உ) ஆகக்கூடிய சில்லறை விலை.

இவற்றிற்கு மேலதிகமாக பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையானது கட்டிடத் தொழிலில் பயன்படுத்தப்படும் வர்ணப்பூச்சுக்களின் எல்லா உற்பத்தியாளர்கள் மற்றும் வியாபாரிகளினதும் வர்ணப்பூச்சுக்களில் உள்ள காரியத்தின் நியம (செறிவு) மி. கி. /கிலோகிராம் அளவை பொதிகளில் அல்லது கொள்கலன்களின் மீது தெளிவாக குறித்தல் வேண்டுமென பணிப்புரை விடுக்கின்றது.

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையானது, 2003, ஒகத்து மாதம் 25 ஆந் திகதிய 1303/1 ஆம் இலக்க மற்றும் 2005, ஒகத்து மாதம் 26 ஆந் திகதிய 1407/23 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பணிப்புரை இல. 2 மற்றும் 4 ஆம் இலக்க வர்ணப்பூச்சுக்களினதும் வார்னிஷ்களினதும் கரைப்பான்களினதும் பணிப்புரைகளை இப்பணிப்புரை மூலம் இரத்துச் செய்கின்றது.

இப்பணிப்புரை 2014, செத்தெம்பர் 01 ஆந் திகதியிலிருந்து அமுலுக்கு வருகின்றது.

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் கட்டளைப்படி,

ரூமி மர்சூக்,
தவிசாளர்.

கொழும்பு,
2014, ஒகத்து 15.

8- 1029/1

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.